# அமைதி தேடி அலையும் நெஞ்சமே

அமைதி தேடி அலையும் நெஞ்சமே
அனைத்தும் இங்கு அவரில் தஞ்சமே - (2)
நிலையான சொந்தம் நீங்காத பந்தம்
அவரின்றி வேறில்லையே
அமைதி தேடி அலையும் நெஞ்சமே

1
போற்றுவேன் என் தேவனை - பறை
சாற்றுவேன் என் நாதனை - எந்
நாளுமே என் வாழ்விலே ( 2 )
காடு மேடு பள்ளம் என்று
கால்கள் சோர்ந்து அலைந்த ஆடு
நாடுதே அது தேடுதே ( 2 )

2
இறைவனே என் தெய்வமே - இந்த
இயற்கையின் நல் இயக்கமே - என்
தேவனே என் தலைவனே ( 2 )
பரந்து விரிந்த உலகம் படைத்து
சிறந்த படைப்பாய் என்னைக் கண்ட
தேவனே என் ஜீவனே! ( 2 )